ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்யதர்மம்.

ஜனங்களுக்கு லௌகிககாரியங்களில் ஊக்கமும் அவைகட்கனுகூலங்களாகிய ஸாதனங்களில் எவ்வளவோ இடையூறிருப்பினும் அவைகளை விலக்கிக்கொண்டு நினைத்தகாரியத்தை நிறைவேற்றிவிடவேண்டுமென்ற விடாமுயற்சியுமிருப்பதுபோல் தர்மகாரியங்களிலு மிருக்குமானால் தர்மதேவதை இவர்களைக்கைவிட்டுவருமா. தர்மதேவதைக்குவிபரீதமாகநடந்துகொள்வதால் இவர்கள் நினைத்தகாரியம் நிறைவேறுகிறதில்லை. இந்தஉண்மையைத்தார்மிகரெவரேனும் கூறுவாராயின் அவரை வைதிகரென அவமதிக்கின்றனர். வைதிகர்களுக்கு லௌகிக கார்யங்கள் வேண்டாமென்ற எண்ணங்கிடையாது. ஆனால் அதைஸாதித்துக்கொள்ள தர்மத்தையும் ஸகாயமாகச் சேர்த்துக்கொண்டால் காரியத்தைக்கண்டெடுப்பது எளிதில் முடியுமென்று அவர்கள் நியாயமூலமாக வித்தாந்தித்திருப்பதைக் கூறுகின்றார்கள். தர்மத்தைக்கைப்பிடித்தால் அதுதற்காலத்திலேயே பயனையளிக்குமா என்று லௌகிகர்கள் சங்கைப்படலாம். அதுசரியல்ல. காரியத்தை ஸாதிப்பதற்காக லௌகிகர்கள் கண்டுபிடித்த வழிகளெல்லாம் உடனுக்குடனே பயனையளித்து விடுகின்றனவா? உதாரணமாக உண்ணாவிரதமிருந்தவர்களும், சிறைவாசத்தை யங்கீகரித்தவர்களும், தங்களது ஜீவிதகாலத்திலேயே அந்தப்பயனையனுபவித்துவிட்டார்களா? தாங்கள் அனுபவிக்காவிடினும் தங்களுக்குப்பிரீதியிருப்பவர்களாவது அந்தப்பயனை அனுபவிக்கட்டுமென்று கருதினார்களென்றால் தர்மத்திலும் இப்படி நினைக்கக் கூடாதா, தற்காலத்திலேயே சிலப் பிரதிபந்தங்களால் பயனையளிக்காவிடினும், பின்னிட்டுத் தமக்கேயாவது தமது சந்ததியார்களுக்காவது அது பயனை யளித்துவிடுமென்று நம்பிக்கையினால் நம்முன்னோர்கள், வைதிகமான வர்ணாச்ரம தர்மத்தையே அனுஷ்டித்து வந்தார்கள். அதனால் இம்மையிலும். மறுமையிலும் சுகமாய் வாழ்ந்தார்களென புராணாதிகளிலிருந்து அறிகிறோம். அந்தக்காலத்திலுள்ளவர்களுக்குத்தான் வர்ணாஸிரமதர்மம் பயனையளித்தது, தற்காலத்தில் அளிக்கமாட்டாது என்றாவது. காலத்திற்கேற்றபடி சீர்திருத்தப் பட்டாற்றான் பயனை யளிக்குமென்றாவது நினைக்க நியாயமில்லை ஆகையால் முன்னோர்கள் போலவே தற்காலத்தியவர்களும் வர்ணாஸிரமதர்மத்தை யாச்ரயித்து சுகத்தையடைவார்களாக

சுபம்

பத்திராதிபர்.

உ

ஆர்யதர்மம்.

பிரமோத-௵ ஆனி-௴ ௧௯௨

# லோகாந்தரம்.

(251-வது பக்கத்தொடர்ச்சி.)

கிரந்தங்களில் பலவாறுகளெழுதிவைத்திருப்பதாகக்கேழ்வைப் பட்டதிலிருந்து நிகழ்ந்த ஸம்சயத்தை எப்படி விலக்குவதெனில் அதற்காக இது கூறப்படுகின்றது.

" श्रुतयश्चैता न कारणं । युक्तिविरोधात् "

கிரந்தங்களிலிருப்பதாகக் கேழ்விக்கு வந்த வசனங்கள் மறுபிறப்பில்லையென்று ஸாதிக்கக்காரணமாகமாட்டா. சுருதிமுதலிய பிரபல ப்ரமாணங்களில் நிரூபிக்கப்படும் யுக்திக்கு முற்றிலும் விரோதப்படுவதாலென்க. சுருதியுக்திகளுக்கொத்த வசனங்கள்தான் பிரமாணங்களாகுமேயன்றி ஏட்டிலெழுதிவைக்கப்பட்டவையெல்லாம் தத்துவநிச்சயத்திற்குக் காரணங்களாகா. யுக்திவிரோதமெப்படியெனில் கூறுவாம்.

" आत्मा मातुः पितुर्वा यः, सोऽपत्यं यदि सञ्चरेत् ।<br>
द्विविधं सञ्चरेदात्मा सर्वो वाऽवयवेनवा ॥<br>
सर्वश्चेत्संचरेत्, मातुः पितुर्वा मरणं भवेत् ।<br>
निरन्तरं, नावयवः कश्चित्सूक्ष्मस्य चात्मनः ॥

தாயார், தகப்பனுர் இவர்களே ஜன்மகாரணமென்ற வாதத்திற்கு ஸமாதானம் கூறப்படுகின்றது. இங்கு முக்கியமாயொன்று கவனத்திலிருக்கவேண்டும். அதாவது—பற்பல விஷயமாக ஞானம் (அறிவு) உண்டாகின்றதல்லவா? அதற்கு ஆச்ரயமாக ஒருவஸ்து அவசியமிருக்கவேண்டும். அது ஆத்மாவென்று சொல்லப்படுகின்றது. இப்படியிருக்கையில் பிறந்த குழந்தையின் சரீரத்திற்குத் தாய்தந்தையர்கள் காரணமென்பதில் ஒருவருக்கும் விவாதமில்லை. இது எல்லோருக்கும் ஸம்மதந்தான். ஆனல் பிறந்த குழந்தையின் சரீரத்தில் அறிவுக்கு ஆஸ்பதமாக இருக்கின்றதே

ஆத்துமா என்றதோர் வஸ்து. அது எங்கிருந்து வந்ததென்று கவனிக்கவேண்டும். மாதாபிதாக்களின் சரீரத்தில் அறிவுக்கு ஆஸ்பதமாக நின்றதே ஒரு ஆத்மா.

அதுதான் புத்ரசரீரத்திலும் வந்ததா? அல்லது வேறுஎங்கே யிருந்தாவது வந்ததா? எங்கேயிருந்தோ வந்ததென்றால் அப்பொழுது ஆத்மாவென்பது முன் ஏதோருவிடத்தில் ஒரு சரீரத்திலிருந்து அதை விட்டுப்போட்டு இந்தப் புத்திரசரீரத்தில் புகுந்ததாகக் கூறவேண்டியதாக வருவதால் மறுபிறப்பு மறுக்கப்படாததாகவே நிலைக்கின்றது. மாதாபிதாக்களின் சரீரத்திலிருந்த ஆத்மா வந்ததென்றால் அதில் அந்த ஆத்மா அவயவமற்றதாயின் முழுவதும் வரலாம். அல்லது ஆத்மா அவயவங்களுள்ளதாயின் அவற்றுள் சில அவயவங்கள் வரலாமென்று இரண்டு பிரகாரமாக வரக்கூடும். முதலாவது பிரகாரத்தில் ஆத்மா அவயவமற்றதாய் ஒரே அகண்டவஸ்துவாயிருப்பதுபற்றி மாதாபிதாக்களுள் எவரது சரீரத்திலிருந்த ஆத்மா புத்ரசரீரத்தில் வந்ததோ அவரது சரீரம் புத்திரோத்பத்தியானவுடனேயே மரித்துவிடவேண்டும். இரண்டு பேர்களுடைய ஆத்மாவும் வந்ததென்றால் இரண்டுபேர்களுமே மரித்துவிடவேண்டும். ஆத்மா விலகிப்போன சரீரம் மரித்து விடுவதாகத்தானே கண்டிருக்கிறோம். இப்படி முதலாவது பிரகாரத்தையாசிரயித்தால் தோஷம் வருகிறதே என்று இரண்டாவது பிரகாரத்தையாசிரயித்தால் அப்பொழுது ஆத்மாவுக்கு அவயவங்களைக் கற்பிக்கவேண்டும். அது சரியாகாது. ஏனெனில் ஆத்ம வஸ்து மிகச் சூக்ஷ்மமானதென்றும், நிரவயவம் (அவயவமற்றது) என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்தூலவஸ்துக்களுக்கு அவயவங்களிருக்கலாம். பூமி முதலிய ஸ்தூலபதார்த்தங்களுக்கு அவயவங்களைக் காண்கிறோம். ஸூக்ஷ்மவஸ்துக்களுக்கு அவயவங்களிருக்க நியாயமில்லை. தார்க்கிகமதரீதியாய்ப் பார்த்தால் ஆகாசம், காலம், மனது முதலிய ஸூக்ஷ்மவஸ்துக்களுக்கு அவயவங்களில்லையென்றே ஏற்படுகின்றது. இவைபோல் ஆத்மவஸ்துவும் ஸூக்ஷ்மமானதுபற்றி அவயவங்களுள்ளதல்ல. ஆகவே இரண்டாவது பிரகாரமும் சரிப்படாது. அதாவது மாதாபிதாக்களின் சரீரங்களில் சில ஆத்மாவயவங்கள் நிற்கின்றன. சில புத்ர சரீரத்தில் வருகின்றனவென்பதும் பொருத்தமுடையதல்ல. ஆத்மாவுக்கு அவயவமில்லாததனாலென்க. சபம்' பத்திராதியர்.

# ஓர் ஸமாதானம்.

ஆஸ்திகர்களே! இவ்வருஷம் நம் ஆர்யதர்மம் ஸஞ்சிகை 22—5—30-ல் வெளியான பத்திரிகையில் சாஸ்திரி நேரு ஸம்வாதம் என்றோர் விஷயம் என்னால் பிரசுரிக்கப்பட்டதை கவனித்திருப்பீர்கள். அவ்விஷயம் பிராமண மகாஸம்மேளன பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதென்றும் குறித்திருக்கிறேன். அவ்விஷயத்தைப்பற்றி வைக்கத்திலிருந்து K. சங்கரநாராயணய்யர், அ. பரமேச்வரய்யர், ஜீ. நீலகண்டய்யர் என்று மூவர் கையெழுத்திட்டு 18-6-30-ல் நம் பத்திராதிபர் அவர்களுக்கு ஓர் லெட்டர் எழுதியிருக்கிறார்கள். அதில் நேருவைப்பற்றி இழிவாய் எழுதிவிட்டதால் பாமதுக்கத்தில் மூழ்கிவிட்டதோடு இவ்விதம் எழுதிவிட்டதால் உலகிற்கே மிகவனர்த்தம் வந்துவிட்டதாயும் கதறுகிறார்கள். அவர்களது லெட்டரின் வாசகம் இது.

“ஆர்யதர்மம் ஸஞ்சிகை 18-ல் வெளியான சாஸ்திரி நேரு ஸம்வாதம் என்னும் கட்டுரையைக் கண்டு பிராம்மணஜனங்களெல்லாம் ரொம்பவும் துக்கிக்கின்றார்கள். இந்த சமயம் அம்மாதிரியான வாதம் ஏற்பட்டதோ இல்லையோ என்கிற சந்தேகத்திற்கு இடையில் M.N. சுப்பிரமணியசாஸ்திரியின் தன்னலமற்ற காரியத்தையும் ஸ்ரீஜத் பண்டித நேருவின் தியாகத்தையும் ஸமூகஸேவையையும் பிராமணத்வேஷிகள்கூட ஸ்துதிக்கின்றதையும் அறிந்த இந்த உலகத்தவர் ஒருவரும் ஷை கட்டுரையை நம்பமாட்டார்கள். இவ்விடங்களில் பப்ளிக் மீடிங்கு வைத்துக் கண்டிப்பதென்று ஏற்பாடு செய்துவருகின்றார்கள். நாங்கள் சிலர் சேர்ந்து பத்திராதிபருக்கும் ஸ்ரீ ஸன்னிதானத்திற்கும் தெரிவித்து ஸரியான பதில் வாராவிடில் பின்னால் செய்துகொள்வோமென்று ஸமூகத்தவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். பகிரங்கமீடிங்கில் ஷை கட்டுரையைக் கண்டித்து உலகமறிந்தவர்களால் ஆதரிக்கப்படுகின்ற வேறு பேபர்களுக்கு விஷயம் போய்விட்டால் திராவிடசாஸ்திரியோ, M.N. சாஸ்திரியோ அல்லது பத்ராதிபரான தாங்களோ ஸ்ரீமடத்திற்கும் பிராமணர்களுக்கும் ஏற்படும் குறையைப் பூர்த்திசெய்யமுடியாதென்பதைத் தெரிவித்துக் கொண்டோம். தயவுசெய்து அடுத்த வெளியீட்டில் மகாஜனங்க

ளின் விருப்பப்பிரகாரம் M N. சாஸ்திரியாரின் கட்டுரையை ரத்து செய்துவிட்டோமென்று பத்திராதிபர் கலத்தில் பிரசுரிக்கவேண்டுகிறோம். இதுவிஷயத்தில் தங்களுக்கு ஸந்தேஹம் தோன்றினால் M. N. சாஸ்திரியார்வகைறாக்களைக் கேட்காமல் ஸ்ரீமான்களான திருச்சி வக்கீல் ஸ்ரீநிவாஸப்பாவர்கள், ஜபாரமப்பாவர்கள், பண்ணையதார் K. V. ரங்கஸாமி அய்யங்கார் முதலியவர்களைக் கொண்டறிந்துகொள்வீர்களென்றும் நம்புகின்றோம்.'' இது அவர்களின் கடிதத்தின் நகல்.

இதில் இவர்கள் நேருவினிடம் செலுத்தியிருக்கும் பக்தி எல்லையைக்கடந்திருக்கிறதென்பதை நன்கு வெளியிடுகின்றனர். உண்மையில் நேருவின் சாமர்த்தியம் உலகத்தாரால் மிகவும் கொண்டாடப்படுகிறதென்பதை யாவரும் மறுக்கமுடியாது. 24-6-30 மித்திரனிலும் அவரைப்பற்றிக் கூறுமிடத்தில் அவருக்கு வயது 70. அவர் தூயவெண்ணிறமான கதர் ஆடை சட்டையணிந்து கொண்டு மிகவெளுத்த தலையிருடன் இருப்பதைப் பார்த்தால் ஆசார்யபுருஷன்போல் காணப்படுகிறானென்கிறார். இதையும் யார் மறுக்கக்கூடும்? ஆனால் இவர்கள் ஆத்திரம் பொங்கி இவ்வளவு தூரம் எழுதிவிட்டதற்கு ஒருவிதமான சமாதானம் உடனே எழுதியனுப்பியிருக்கவேண்டும். அவ்விதம் செய்ய இடமில்லாதபடி இவர்கள் 18-6-30-ல் எழுதிய லெட்டர் பத்திராதிபருக்குக் கிடைத்து அதன்பேரில் அதன் காபியை எனக்கு அனுப்பியதில் அது 25-6-30-ல் மாலைதான் என்கையேறிற்று. ஆகவே மறுநாள் குருவாரமாய்விட்டதால் அப்பத்திரிகைக்கு இவ்விஷயம் எட்டநியாயமில்லையென்று அதற்கடுத்துப் பிரசுரிக்க நேர்ந்தது. ஆனால் வைக்கத்தார்கள் லெட்டர்கடைசியில்இதுவிஷயத்தில் ஸம்சயம் தோன்றினால் M. N. சாஸ்திரிவகைறாக்களைக் கேட்காமல் திருச்சி வக்கீல்களைக் கேட்கும்படி எழுதியிருக்கின்றனர். பத்திரிகையில் விஷயமனுப்புவோரின் விஷயத்திற்குப் பத்திராதிபர் பாத்தியமற்றவர் என்றும், விவாதம் நேரிடின் எழுதினவரைக் காண்பித்துக் கொடுக்கவேண்டியதுமட்டும்தான் அவர்களின் பொறுப்பென்னும் ரூல் இந்த பிராமணர்களுக்கு ஞாபகத்திற்கு வரவில்லைபோலும். மற்றும் நான் எழுதிய விஷயத்திற்கு திருச்சி வக்கீல்கள் யாது செய்யக்கூடுமோ? ஒரு ஸமயம் என்பேரிற் குற்றம் ஏற்பட்டுவிடின் எந்த ஸெக்ஷனில் எடுத்துக்கொள்ளலாமென்

பதற்கு அவர்களைக் கேட்கலாம். ஒன்றுமில்லாமல் M. N. சாஸ்திரிவகைறுக்களைக் கேட்கவேண்டாமென்பதற்கு நியாயம் இருப்பதாய்ப் புலப்படவில்லை. பிராமணமகாஸம்மேளனம் என்ற ஸம்ஸ்கிருத பத்திரிகை ஒன்று மாதமொரு முறை 24 பக்கங்கொண்டதாய் காசியிலிருந்து வெளியாகிறது. அது வடதேசத்தில் விசேஷப் பிரசாரம் பெற்றிருக்கிறது. அதிலுள்ள விஷயத்தை ஹிந்தியில் தர்ஜுமாய்ச் செய்து ஹிந்திஸாப்தாஹிகபத்ரீ என்றும் இவர்களே வெயிடுகிறார்கள். அப்பத்திரிகை 2வது வருடம் 10வது மாக மாதஸஞ்சிகையில் 227ம் பக்கத்தில் நான் எழுதிய விஷயம் இருக்கிறது. அதன் தலைப்பெயர் சாஸ்திரி நேரு ஸம்வாத: என்றிருக்கிறது. அதையே தான் நான் தர்ஜுமா செய்தேன். ஆனால் அவ்விதம் ஸம்வாதம் நடந்ததா இல்லையாவென்பதை ருஜுச் செய்ய நான் முன்வரவேண்டியவனல்ல.

அடுத்து என் கட்டுரையைக்கண்டு பிராமணஜனங்களெல்லாம் ரொம்பவும் துக்கிக்கின்றனர் என்கின்றனர். இங்கு இதைக் கேட்கிறேன். நான் முற்கூறிய நேருவை யாவரும் போற்றுகிறதை ஒப்புகிறேன். ஆயினும் அவர் மதவிஷயத்தில் தவறிழைத்தவர் என்று காசியில் 1926ல் நடந்த பிராமணமகாஸம்மேளனத்தில் கூடிய பதினாயிரத்திற்கு மேற்பட்ட பண்டிதர்களான பிராமணோத்தமர்கள் கண்டித்திருக்க இவர்கள் கூறும் அப்பிராம்மணர்கள் ரொம்பவும் துக்கிக்கிறார்களென்றால் இங்கு யாது கூறமுடியும். சாரதாசட்டத்தைப்பற்றி உக்கிரமாய் இவர் பேசும்போது இந்துமத சாஸ்திரங்களை நான் நம்பவில்லை என்றும் அவைகளை சமுத்திரத்தில் கிழித்தெறிய வேண்டுமென்றும் சொன்னதாய் அச்சமயம் பத்திரிகையில்வந்ததையிவர்கள் அறியவில்லைபோலும். அதற்குமுன் நேரு யாதாஸ்து ஒன்று வெளியானது. அதில் இந்தியாவுக்கு ஸ்வாராஜ்யத்தின் திட்டத்தை வெகுஅழகாய் அதிசூக்ஷ்மபுத்திகூர்மையோடு வெளியிட்டிருப்பதாய் உலகம் போற்றிற்று. அதில் மதவிஷயத்தில் மிகவசட்டையாய் எழுதினதை ஒவ்வொரு ஜில்லாவிலும் கூடிய வர்ணாசிரமதர்மாபிமானிகள் தாங்கள் நேரு யாதாஸ்தை ஆதரிக்கவில்லையென்று கண்டித்ததையும் இவர்களறியவில்லைபோலும். இவைகளையெல்லாம் சற்று நிதானித்துப் பார்க்காமல் இவர்கள் அவஸரப்பட்டார்களென்று நினைக்கிறேன். சற்று நிதானித்தால் என்னைப்பற்றி ஏகதேசமாயும் தன்

னலமற்றவர் என்றும் எழுத நேர்ந்திராது. இனி அடுத்து இவர் பயமுறுத்துகிறார்கள். அதிலும் பொறுமையைவிட்டெழுதுகிறார்கள். இவ்விஷயத்தைக் கண்டிப்பதென்று ஏற்பட்ட பெருங் கூட்டத்தை ஏதோ கருணைகொண்டு தேக்கிவைத்திருப்பதாயும் எழுதுகிறார்கள். இவ்விஷயத்தில் என்னைச் சிக்ஷித்துவிடுவதென்று சினம் கொண்டாராயினும் ஸ்ரீமடத்தின் சார்பான பத்திரிகை யென்று கேட்டுச் செய்வோமென்று பொறுத்தது தகுதியே. ஆனால் அவ்விதம் பப்ளிக் மீட்டிங் போட்டால் எனக்கு நலமே உண்டாகலாமென்று எண்ணுகிறேன். ஏனெனில் கிணற்றுத் தவளைபோல் உலகமறியாதபத்திரிகையில் வியாசம் எழுதுமெனது பெயரும் அவ்விதத்தால் உலகமறிந்தவர்களால் ஆதரிக்கப்படுகிற வேறு பேப்பர்களிலும் வெளியாகுமல்லவா

येनकेन प्रकारेण प्रसिद्धः पुरुषोभवेत् ॥

என்று ஆகும். இனி அவ்விதம் பத்திரிகைகளுக்கு விஷயம் போய்விட்டால் ஸ்ரீமடத்திற்கும் பிராமணர்களுக்கும ஏற்படும் குறையை நிவர்த்திக்க M.N. சாஸ்திரியோ திராவிட சாஸ்திரியோ பத்திராதிபரான தாங்களோ நிவர்த்திக்க முடியாதென்று மிகவும் பயப்பட்டுக்கொண்டு அதற்காகவே பப்ளிக்மீட்டிங்கை நிறுத்தி யிருப்பதாய்க் கூறுகின்றனர். இவ்விதம் பயப்பட்ட அந்த மீட்டிங்கால் என்னநேரும். பிராமணர்களுக்கும் ஸ்ரீ மடத்திற்கும் என்ன அனர்த்தம் வருமோ தெரியவில்லை. அப்படி ஒன்றும் நேராது. ஸ்ரீமடமும் பிராமணர்களும் இப்போதுஏற்பட்டதல்ல. இவ்வியாஸத்தாலும் வைக்கத்துப் பிராம்மணர்களது பப்ளிக் மீட்டிங்காலும் ஒருவிதமான கெடுதலும் ஏற்படாதென்பதை நிச்சயமாய் அறியலாம். M.N. சாஸ்திரி என்று கூறுவது சாலவும் பொருந்தும். திராவிட சாஸ்திரி என்று கூறுவதை மட்டும் வர்ணாசிரம தர்மாபிமானிகள் மிகவும் குறைவாய் எண்ணுவார்கள். ஆகவே இனியும் மீண்டு இவ்வார்த்தையைக் கூறி முடித்துக் கொள்கிறேன். நேருவை நான் திட்டவந்தவனல்ல. மகாமகோபாத்தியாய பண்டிதோத்தம பிர்மஸ்ரீ திராவிட லக்ஷ்மண சாஸ்திரிகளவர்களும் அவரை நிந்திக்க வரவில்லை. அவர்கள் காசியில் இருந்துகொண்டு ராஜாக்களாலும் அனேகபிரபுக்களாலும்மிகவும் போற்றப்பெற்று அனேக சிஷ்யர்களுக்கு சாஸ்திரப் பிரவசனம் செய்துகொண்டுவிளங்கிவருகிறார்கள். இச்சம்வாதம் அவர்களுக்

குள் நடந்ததும் வாஸ்தவம். இதைப்பற்றி எந்த ஊரிலிருந்தும் ஆஸ்திகப் பிராம்மணர்கள் நாளது வரை வைக்கத்துப் பிராம்மணர்கள்போல் எழுதிக்கேட்கவில்லை. நேரு மதவிஷயத்தில் மட்டிலும் மிகவும் லக்ஷ்யமற்றவர்தான்.

ஆனால் இக்கட்டுரையை அதிலிருந்து இதில் எழுதுவானேன் என்று கேட்டதற்கு பதிற் கூறுகின்றேன். மதவிஷயத்தில் நேரு சிரத்தையுள்ளவரல்ல. ஆகவே அவ்விஷயத்தில் ஏதாவது அவர் சொன்னால் அதைப் பிரமாணமாய்க்கொள்ளக்கூடாது என்று நம் தென்தேசவர்ணாச்ரமாபிமானிகளும் அறியவேண்டுமென்ற முக்கிய எண்ணம் கொண்டே இங்கு வரையலானேன். இன்னும் இதுமாதிரிபலவிஷயங்கள் அப்பத்திரிகையினின்று மொழிபெயர்த்துப் பிரசுரிக்கப்படலாம். அதைக்கண்டு ஆஸ்திகர்கள் விஷயத்தை அறியட்டுமென்பதே என் எண்ணம். இதையறிந்து வைக்கத்துப் பிராம்மணர்கள் என்பேரில் சினம கொள்ளாமல் சாந்தமடையக் கேட்டுக்கொள்ளுகிறேன். சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

## ஆர்யதர்மாபிமானிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

ஆஸ்திகர்காள்! நமது தாய்நாடாகிய இப்பரதகண்டத்தில் உள்ள மானிடர் ஒவ்வொருவரும் முக்யமாக கவனிக்கவேண்டிய விஷயங்களில் பத்திரிகாபிமானமும் ஒன்று என்பதை மறுக்க முடியாது என நினைக்கிறேன். இது பத்திரிகைகளின் காலம். பத்திரிகைகளின் உதவியில்லாமல் எந்தக்கார்யமும் சாதிக்கச்சாத்தியப்படாது. ஸ்வல்பச்செலவில் ஏககாலத்தில் பல முக்யமான விஷயங்களை போதிப்பதில் பத்திரிகைகளுக்கு நிகராக ஒன்றையும் ஒப்பிடமுடியாது என்று துணிவாய்க்கூறலாகும். ஒருவன் தானாக பல வருடங்கள் ஆராய்ந்துபார்த்தாலும் ஒரு விஷயத்தினுண்மை காண்பது அறிது. அதே விஷயத்தைப்பற்றி பலருடைய அபிப்பிராயங்களையும் ஒரேநாளில் பத்திரிகைகள் தாங்கிக்கொடுக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை,

நிற்க, நமது நாட்டில் நவீனநாகரீகமாகிய ஒரு பெரும்பேய் கிளம்பியிருக்கிறது. இந்தப்பேய் நம் நாட்டில் சில காலமாக வஸித்துவருகிறது. இப்பேயின் வாயில் அகப்படாதார் மிக்கச் சிலரேயாவர். உண்பதிலும் நாக்ரீகம், உடுப்பதிலும் நாகரீகம், படிப்பதிலும் நாகரீகம், எல்லாம் நாகரீகமயம்தான், நமது ஆன்மா போன்ற மதாசாரங்கள் வரவரப் பாதாளப்படிகளின்வழியே சென்று சூன்யமாகிவிடும்போல் இருக்கும்தருணத்தில் நமது நண்பனுன ஆர்யதர்மம் என்னும் ஒரு பத்திரிகாசிரியன் தோன்றி, மதசம்பந்தமான விஷயங்களை அமிருததாரையைப்போல் வர்ஷிக்கின்றுன். நாம் எவ்வாறு நடந்துகொண்டால் நம்முடையமதத்தை நழுவவிடாமல் இருக்கலாம் என்றும் நம்முடைய சாஸ்திரங்களில் உள்ள விசேஷமஹிமைகளை நாம் தெரிந்துகொள்ளும்படிக்கும் தெரிந்தோர்கள் பல தடவைகளில் நமது ஆர்யதர்மபத்திரிகைமூலமாகத் தெரியப்படுத்துகிறுர்கள். நம்மவரில் (சிலர்) இதையறியாமலும் நமது ஆர்யதர்மத்தை ஆதரிக்காமலுமிருப்பது தெரிந்தோ தெரியாமலோ அல்லது நவீனநாகரீகமயக்கமோ ஒன்றும் அறிகிலோம்.

ஆர்யர்காள்! நமது ஆர்யதர்மபத்திரிகைக்கு வருஷச்சந்தாவாகிய ஸ்வல்பத்துகை ரூ 3—0—0தான் இதை எவரும் எளிதில் அளிக்கலாம். மாதமொன்றுக்கு 0—4—0 ஆக ஒரு பெட்டியில் போட்டுவந்தால் வருஷக்கடைசியில் 3—0—0 ஆகின்றது. அந்த துகையை உடனே நமது ஆர்யதர்மத்திற்கு அனுப்பிவிட்டால் நமது மதாசாரங்களை போதித்தும் மதத்வேஷமாய்ப் பேசுகின்றவர்களைக் கண்டித்தும் வருகின்ற அப்பத்திரிகை வர்ரந்தோறும் நமது இருப்பிடம் தேடிவருகின்றது. இந்நாட்டிலுள்ளவர்கள் அவசியமாகப் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய பத்திரிகைகளில் இவ்வார்யதர்மமும் ஒன்றுகும். நம் நாட்டிலுள்ள ஆர்யச்சிறுவர்களிடம்மிக்ககருணைகொண்ட பத்திரிகை இதுவேயாகும் என்பது அதன் சந்தாவிஷயத்திலிருந்தே தெளிவாக விளங்குகிறது. இவ்வளவு அபூர்வமான பத்திரிகைக்குச் சந்தாநண்பர்கள் மிகக்குறைவாக இருப்பது கலியின் கொடுமைகளில் இதுவும் ஒன்று என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

இங்கிலாந்தில் லக்ஷத்திற்கு அதிகமான சந்தா உள்ள பத்திரிகைகள் பல இருக்கிறதாகத் தெரிகிறது. அந்தோ! நம் நாட்டில்

50000 சந்தா உள்ள பத்திரிகைகள் ஒன்றுவது இல்லையென்று சொல்லலாம். காரணம் யாதெனில்நம்மவற்கு தாய்பாஷாபிமானம் குறைந்துவிட்டதுதான், மேனாட்டாரில் ஒருவன் தாய்பாஷையை அலக்ஷியம் செய்துகொண்டிருந்தால் மற்றவர்கள் அவனை மதிக்கவேமாட்டார்கள். இதுவிஷயத்தைமாத்திரம் நம் நாட்டார் மேனாட்டாரிடமிருந்து கற்றுக்கொள்ளாமல் மற்றவைகளையெல்லாம் கற்றுக்கொண்டதாக பகல்கனவு காண்கிறார்கள். இவர்களுக்கு என்றுதான் தாய்பாஷையை அலக்ஷ்யம் செய்யாமலும் அன்யமததூஷணை செய்யாமலும் மதசம்பந்தமான பிரச்னைகளை சட்டசபைக்குக் கொண்டுவாராமலும் இருக்கும்படி ஈசன் அருள் புரிவானோ, அன்றேதான் நம் நாடும் நாமும் முன்னேற்றம் அடைவோம்.

(1) நம்நாட்டில் ஆங்கிலம் கற்றவர்களில் (சிலரை) நீங்கள் ஏன் தமிழ் பத்திரிகைகள் வாவழிப்பதில்லை என்று யாரேனும் கேட்டால் இவர்களில் (சிலர்) தமிழ் பத்திரிகைகள் வாசிக்க எனக்கு இஷ்டமில்லை என்றும் அதில்என்ன சாராம்சம் இருக்கிறதென்றும் அன்னிய பாஷையிலேயே பதில் கூறுகின்றார்கள். இவர்கள் கூறுவது 'மாதா வயறெறிய மகேச்வரபூஜை செய்தது' போல் ஆகும்.

(2) வேறு சிலர் பத்திரிகைகளை வாசித்தும் அதன்படி நடக்க யத்தனிப்பதில்லை. உதாரணமாக— ஆர்யதர்மத்தில் நமது வர்ணாசிரம தர்மங்களுக்கு மிக்க உபயோகமாகும்படி அனேக விஷயங்கள் பல பண்டித சிரேஷ்டர்களால் தீர்மானிக்கப்பட்டு வருகிறது. அதன்படிக்கு ஒவ்வொரு கிராமங்களிலும் அனுஷ்டானத்தில் செய்துவந்தால் மிக்க சிரேயஸ்ஸையடைலாம் என்று உறுதியுடன்எல்லா ஆஸ்திகர்களும் சிரத்தை எடுத்துக்கொண்டால் ஷை பண்டிதர்களுக்கும்நமதுசாஸ்திரங்களுக்கும்நமது ஆர்யதர்மத்திற்கும் விசேஷநன்றிசெலுத்தியவர்களாக ஆவோம். நமக்குள் ஒரு ஒற்றுமைக்கும் காரணமாகும். இந்த விஷயத்தைக் கனவிலும் நினைக்காமல் சிலர் இருக்கின்றனர். பொழுதுபோக்குவதற்காக பத்திரிகைகளை வாசித்தும் பிறகு அதன்படி நடக்க யத்தனிக்காமலும் இருக்கின்றனர். நமது மதாசாரங்கள்வரவரக்ஷீணதசையை அடைந்து வருகின்றதை மறுக்கமுடியாதாயினும் நம் நாட்டு ஆர்யர்கள் அனைவருமாவது ஆர்யதர்மத்தை ஆதரிக்க முன்வந்தால்

கூடியசிக்கிரத்தில் நமது ஆர்யதர்மம் வாவா விருத்தியாகி நம் எல்லோருக்கும் இகத்தில் ஸர்வமங்களத்தையும் கொடுத்து பரத்தில் மோக்ஷஸாம்ராஜ்யபத்தையும் அளிக்கும் என்பதில் தடையேஇல்லை.

(3) மற்றும் சிலர் பத்திரிகை வாசிக்க எனக்கு சாவகாசம் இல்லைஎன்றும் பணம்சம்பாதிக்க எவனேஒருவன் பத்திரிகைகளில் எழுதுகின்றான்என்றும் வாய் கூசாமல் சொல்லி படிப்பவர்களின் மனதையும் கலைத்து விடுகிறார்கள். ஆண்டவன் நமக்கு எல்லாப் பிறவிலும் சிறந்த இம்மானிடப் பிறவியை எதற்காக அளித்தார் என்று இவர்கள் அறிவார்களா? இவர்கள் அறியாவிட்டாலும் படித்தவர்கள் சொல்லியாவது கேட்டதில்லையா? இப்படியேஇவர்கள் எந்த வழியிலேனும் திரவ்ய சம்பாத்யம் செய்வதும், மதிதூஷணைகள் செய்வதும், உண்பதும் உறங்குவதுமேதான். இம்மானிட ஜன்மா எடுத்ததற்கு மோக்ஷப்படிகள் என்று மனோராஜ்யம் செய்துகொண்டு, 60நாழிகையும் இவற்றிற்கே செலவு செய்தால் பகுத்தறிவில்லாத மிருகங்களுக்கும் இவர்களுக்கும் வித்யாஸம் யாது? அவைகளும் அதேவேலைதான் செய்கின்றன.

(4) (சில) வைதிகரத்னங்கள் ஆர்யதர்மம் பத்திரிகை வாசிக்க யத்தனிப்பதில்லை. மேலும் படிப்பவர்களையும் இழிவாகப் பேசுகிறார்கள். வடமொழியிலும் ஒரு நூல் எழுதி அதன் கருத்தை தென்மொழியில் பலஆக்ஷேபசமாதானத்துடன் எழுதியிருந்தால் இவர்களில் (சிலர்)தென்மொழியைவிட்டு வாசிப்பதை ஸர்வசாதாரணமாகப் பார்க்கலாம். வடமொழியால் அதன்விஷயம் தெரிந்துகொண்டாலும் தென்மொழியில் உள்ள விசேஷங்களைப் படித்தறிந்தால் என்ன கௌரவக்குறைவோ தெரியவில்லை. தென்மொழியைப் படித்தறிந்தால் கௌரவக்குறைவு, ஆசாரக்குறைவு என்று இவர்கள் நினைக்கிறார்கள்போலும் அப்படியானால் இவர் குடும்பங்களில் அனுபவத்தில் பேசும் பாஷை வடமொழியா? அல்லது தென்மொழியா? குழந்தைப் பருவத்தில் பாலூட்டும் போதும் தாலாட்டும்போதும் இவர்கள் தாயார் எந்த பாஷையில் பேசினார்கள்? இவர்களுக்கு வரும் கடிதங்கள்முதல் தென்மொழியாகவே இருக்க அம்மொழியைக் கேவலமாக நினைத்தால் இவர்களுடைய விசாலபுத்தியை என்னென்றுரைப்பது.

(சிலர்) கையெழுத்து மாத்திரம் கோணல்கோணலாக போடப்பழகி இருப்பார்கள். இப்படி இருந்தால் மிகவும் பிசகு என்

பதைக் கனவிலும் நினைக்காமல் இருக்கிறார்கள். இவர்களைப் பார்த்து நவீனநாகரீகப் பித்தர்கள் சிரிக்கிறார்கள். அப்போது கொஞ்சம் கோபமும் வருகிறது என் செய்வது. ஆகையால் வைதீகாத்னங்கள் இனியாவது இவ்வாறுசெய்வதிலிருந்து திருத்திக்கொள்வார்களாக. (நாம் எழுதினதில் வைதிகர்களை தூஷித்ததாகவாவது, வடமொழியில் பிரியம் இல்லை என்றாவது சொல்வது மதியீனமேயாகும். வடமொழி அத்யாவசியமாக இருந்தாலும் தென்மொழியை அலக்ஷ்யம் செய்வது கூடாது என்பதே எனது வேண்டுகோள்.)

## ஆர்யதர்மத்தின் சந்தா நண்பர்களுக்கு ஒரு வார்த்தை.

நேயர்காள்! நாம் எல்லோரும் (ஆர்யதர்மம் சந்தா நண்பர் ஒவ்வொருவரும்) வருஷத்தில் ஒன்று இரண்டு புதிய சந்தா நண்பரைச்சேர்த்து அனுப்பினால் அதுவே இப்போது பெரிய உபகாரமாக இருக்கும். மேலும் சந்தாத் தொகையையும் ரூ 4 ஆகசெய்து இன்னும் பத்து பக்கங்கள் கூட சேர்த்து வெளியிடும்படி நாம் எல்லோரும் பத்திராதிபருக்கு எழுதிக்கொண்டும் இருக்கவேண்டும். நாம் எல்லோரும் ஆர்யதர்மத்தை ஆதரிக்கவும் வேண்டும். நாம் எல்லாரும் சேர்ந்து இவ்விதம் ஏற்பாடு செய்துகொண்டால் கூடியசீக்கிரத்தில் நமது ஆர்யதர்மத்தை வாரத்தில் மூன்று தடவை வெளிவரும்படி செய்தும், பிறகு தினசரிப்பத்திரிகையாகவும் செய்துவிடலாம் என்று உறுதிகொள்ளுங்கள். இகத்தில் சர்வசேஷமங்களையும் அளித்து பரத்தில் மோக்ஷஸாம்ராஜ்யத்தை அளிப்பதும் இந்த ஆர்யதர்மமே.

நான்கு வர்ணத்தார்களுக்கும் போதிக்க வல்லமை பொருந்தியதும் இவ்வார்யதர்மமே. வேதசாஸ்திர சம்பன்னர்களான பண்டித சிரேஷ்டர்கள் போற்றத்தக்கதும் இவ்வார்யதர்மமே. பதிவிருதாசிரோமணிகள் பார்த்து பரமானந்த சுகத்தையடைய வேண்டியதும் இந்த ஆர்யதர்மமே. இவ்வளவு விசேஷகுணமுள்ள இந்த ஆர்யதர்மத்தை ஆதரிக்கும் சந்தா நண்பர்களுக்கு என்றைக்குப் பரமானந்தமோ இது விஷயமாக இன்னும் எழுதுவதானால் மிகப்பெருகும். ஆதலால் இத்துடன் நிறுத்துகிறேன்.

சில பத்திரிகைகள் அன்யமததூஷணைசெய்வதிலேயே அவைகளின் நாளை வீணாகியும் எமனுலகை எதிர்பார்த்த வண்ணமா

யும் இருந்துவருகிறது. இத்தகைய பத்திரிகைகளால் நமது நாட்டிற்கு யாது பயன். இவை போக சர்வ ஜனங்களும் சமாஸத்துடன் ஒற்றுமையாக வாழ எண்ணங்கொண்டு அன்புடனுழைக்கும் பத்திரிகைகள் மிக ஸ்வல்பம். ஆனால் அதை ஆதரிக்கும் சந்தாநண்பர்கள் அதனிலும் ஸ்வல்பம் என்றே சொல்லவேண்டும். அத்தகைய பத்திரிகைகளில் நமது ஆர்யதர்மம் முதன்மை பெற்றதாகும். ஆகையால் ஆஸ்திகர்கள் அனைவரும் ஷை பத்திரிகையை ஆதரித்து வரும்படி எனது சிற்றறிவிற்கெட்டியவாறு எழுதலானேன்.

ஆசார்யானுக்கிரகம்பெற்ற ஆர்யதர்மமும், அதன் ஆசிரியரும் சந்தாநண்பரும் இதை வாசிப்போரும் நீடூழி வாழ்ந்திருக்க ஆசார்யபாதாரவிந்தங்களில் பன்முறைகள் நமஸ்காரம் செய்யும்.

சந்தா நெ. 548. T. V. தர்மராஜ கனபாடிகள்.

---

## அடையப்பலம் கிராமத்தில்
# ஆசார்ய விஜயம்.

2—6—30-ல் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் இக்கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். இவ்வைபவத்தை ஆஸ்திகர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டுமென்றே இப்பொழுதுவெளியிட முன்வந்தேன். நம் இந்தியாவில் அனாதிகாலமாய்ப் பிரகாசித்துக்கொண்டும் இடையில் ரக்ஷிப்பவனில்லா குறையாலோ ஆதரித்தனுட்டிப்பவர்களின் சிரத்தைகுறைபாலோ வாடும் ஸ்வபாவமுள்ள நம் மதமும் அதில் வேதசாஸ்திரங்களை தழுவி பிரிவுபட்டதுபோன்ற சைவம் வைஷ்ணவம் முதலிய மதபேதங்களும் அப்போதப்போது தோன்றும் ஆசார்யபுருஷர்களால் முன்நிலைக்குக் கொண்டுவரப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுவருகின்றதென்ற ஒன்றை இங்கு நினைவுக்குக்கொண்டுவருகிறேன். இதன்படிதான் நம் பரமாசார்யாளின் அவதாரமும் அத்வைதஸ்தாபனத்திற்காகவும் விசிஷ்டாத்வைதத்திற்கு ராமானுஜர் முதலியவர்களுடைய அவதாரம் இவ்விதமே பல மதாசார்யர்களும் அவதரித்ததாய் ஒப்புக்கொள்கிறோம். அவ்விதமே வ்யாஸ சூத்திரத்திற்கு ஸ்ரீகண்டபாஷ்யமென்றெழுதி சிவாத்வைதத்தை ஸ்ரீ நீலகண்ட

சிவாசார்யாரென்பவர் ஸ்தாபித்தார். இவர் நம் ஆசார்யாளுக்கு முன்னமே அவதரித்து சைவத்தை நிலைநிறுத்தினர். இவரது வார்த்தகதசையில் சாந்தமாய் கோகரணக்ஷேத்திரத்தில் தவம் புரிந்து கொண்டிருந்தனரென்றும் அச்சமயம் நம் ஆசார்யாள் அங்குசென்று அவர்களிடம் வாது புரிந்து தன் அத்வைதத்தை ஸ்தாபித்தாரென்றும் சங்கரவிஜயத்திலிருக்கிறது. இதிருக்கட்டும் இவ்விதம் ஸ்ரீகண்டசிவாசார்யார் எழுதியபாஷ்யத்திற்கு விரிவுரை இல்லாமையாலும் அதிகாரிபேதத்திற்குத் தக்கவாறு கிரந்தங்கள் இல்லாததாலும் நம் சைவசமயம் வாடநேர்ந்தபோது அப்பய்ய தீக்ஷிதர் என்ற ஓர் மகான் அவதரித்து ஷை பாஷ்யத்திற்கு அழகான வ்யாக்யான சிவார்க்கமணி தீபிகையென நாமமிட்டு எழுதியருளினர். அம்மகானும் அவதாரபுருஷன் தான் அவதாரமென்பதற்கு முக்கியலக்ஷணம் பூர்ணமாய் உண்டு. இன்னார் அவதரிப்பார் என்றுபவிஷ்யத்புராணத்திலும் கூறப்பட்டிருக்கிறது. இம்மகான்இக்கிராமத்திலவதரித்தார்என்று வெகுஜனவாதமிருக்கிறது. இவர்கள் விரிஞ்சிபுரத்திலவதரித்தார் என்றுமிவர்களது மாமன் வீடு அங்கிருந்ததென்றும் விசேஷவாஸமிங்குஏற்பட்டதென்றும் கூறுகின்றனர் சிலர். இம்மகானின் சரித்திரத்தைப்பற்றி மிகவும் விரிவாய் இப்பத்திரிகையில் K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால் எழுதப்பட்டுவிட்டதால் மீண்டும் அதிலிறங்கமுன்வரவில்லை. மற்றுமிக்கிராமம் அவதார புருஷனின் புண்யஸ்தலமென்றும் இக்ஷேத்திரத்திற்கு அடியேனும் ஸ்ரீபரமாசார்யார்களின் பாதபத்மதூளிவாகனாய் ஸ்ரீ ஆக்ஞைப்படி கூடவே போய் ஸேவிக்க நேர்ந்ததென்பதையுமட்டும் கூறவந்தேன். இவ்வூர் ஆரணிக்கு வடகிழக்கில் சுமார் 3மைல் தூரத்திலிருக்கிறது. இக்கிராமத்தில் இருக்கும் மகாஜனங்களின் கிரகம் சுமார் 10 இருக்கிறது. இவர்களெல்லோரும் இம்மகானின் பரம்பரையில் ஜனித்தவர்களென்றும் சமீபித்த தலைமுறை உள்ளவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அங்கு அவர்கள் ஸ்வல்பமாய் இருந்தபோதிலும் தஞ்சாவூர் மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் அவ்வம்சத்தவர்கள் விசேஷமாய் சாகோபசாகையாய் இருக்கின்றனர். தென்தேசத்தில் பிரகாசித்த மகான் ராஜு சாஸ்திரிகளென்ற தியாகராஜாத்வரிகள் அப்பய்ய தீக்ஷிதரவர்களின் 8வது தலைமுறை என்பார்கள். இதிருக்கட்டும நம் பரம

கருணாமூர்த்தியான ஆசார்யாரவர்கள் ஆரணியில் விஜயம் செய்தி ருந்தகாலத்தில் அடியேனும் ஸேவை செய்து கொண்டிருந்து விட்டு எனது ஊருக்குத் திரும்பும் உத்தேசத்தோடு ஸ்ரீசரணங்களிலடி பணிந்து விடையளிக்கப் பிரார்த்தித்தபோது இப்போது போகவேண்டாம். ஸமீபத்தில் அடையப்படும் கிராமம் இருக்கிறது. அது தீக்ஷிதாவர்களின் அவதாரஸ்தலம். அங்கு சென்று திரிபுரசுந்தரீ சந்திரமௌளீசுவர பூஜையை ஸேவித்துப் போகலாமென்று திருவாக்குக் கிடைத்தது, அன்றிரவு அக்கிராமவாசிகளான தீக்ஷிதகிருகஸ்தர்கள் ஸ்ரீசரணங்களில் வணங்கி வழிபட்டு தங்கள் கிராமத்திற்கு ஸ்ரீசரணதூளி கிடைக்கவேண்டும். ஸ்ரீகடாக்ஷம் எங்களது கிராமத்தில் இறங்கவேண்டும். நாங்கள் லௌகிக மரியாதையால் ஸ்ரீமடத்தைப் பூரணமாய் ஆதரித்தழைக்க சக்தியற்றவர்களாய் இருக்கிறோம். எங்களைக் காத்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தனர். நாங்கள் தீக்ஷிதாவர்களின் வாஸஸ்தலமென்ற ஒரு கருத்தால் ஸ்ரீசந்திரமௌளீசுவராராதனத்தை நாளை அங்கு செய்வதாய் தீர்மானித்திருக்கிறோம். உங்கள் லௌகிக மரியாதையை ஸ்ரீமடம் துளியளவேனும் மலையளவாய் ஏற்கும் என்று ஆக்ஞாபித்தனர். அத்திருவாக்கால் கிருகஸ்தர்கள் ஆனந்தக்கடலில் மூழ்கினர். அவ்வண்ணமே மறுதினம் அங்கு விஜயம் செய்து திவ்யாராதனங்களை நடத்தி சிஷ்யகோடிகளுக்கு தீர்த்தப் பிரஸாதம் முதலியன அளித்து அனுக்கிரகித்தனர். அன்று சாயந்திரம் ஸ்ரீமூர்த்திகள் கிராமத்திற்குத் தென்புரத்தில் வயல்களின் மத்தியில் இருக்கும் திருக்குளத்தில் மூழ்கி அனுஷ்டானம் செய்தனர். அத்தீர்த்தம் சாமான்யமானதன்று ஸ்ரீதீக்ஷிதாவர்கள் ஓர் யாகம் செய்து இதில் அவபிருதஸ்னானம் செய்தார்கள் என்று அனுக்கிரஹித்தனர். அங்கிருந்து சிஷ்யகோடிகள் சூழ சிவன் கோவிலுக்குவந்து சிவதரிசனம் செய்து கொண்டு பிரகாரத்தில் இருந்த கல்வெட்டு எழுத்துக்களைக்கூர்ந்து பார்த்து அடியேன் வகையறுக்களிடம் படித்துக் காண்பித்து அனுக்கிரகித்தார்கள்.

(தொடரும்)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

உ

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஸ்ரீ வியாஸபூஜா சாதுர்மாஸ்ய பத்திரிகை.

ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளின் ஸர்வக்ஞ பீடாரோஹண ஸ்தானமாயும், ஸாக்ஷாத் அதிஷ்டானஸ்தானமாயுமிருக்கிற ஸ்ரீகாஞ்சி க்ஷேத்திரத்தின்கண் விளங்காநிற்கும் ஸ்ரீகாமகோடி பீடாதிபதி கும்பகோண நிவாஸிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் சிஷ்யகோடிகளை அனுக்ரஹிக்கும்பொருட்டு விஜய யாத்திரையாகப் புறப்பட்டு காவேரீ தீரத்திலுள்ள ஜெம்புகேச்வர க்ஷேத்திரத்தில் பூர்வம் ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளால் ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பாளுக்கு பிரதிஷ்டை செய்விக்கப்பட்ட ஸ்ரீ சக்கிரதாடங்கங்களை ஜீர்ணோத்தாரணப் பிரதிஷ்டைசெய்து பிரகிருதம் கன்னியாகுமாரீ பரியந்தமான அநேக தீர்த்த க்ஷேத்ராடனங்களைச் செய்துகொண்டு ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளால் ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ காமாக்ஷி ஆலய ஜீர்ணோத்தாரணத்தை உத்தேசித்து ஸஞ்சாரம் செய்துவரும் கிரமத்தில் வியாஸபூஜாமஹோத்ஸவதினமாகிய நாளது பிரமோத-௵ ஆஷாடசுத்தபூர்ணிமை [ஆனி-௴ 26௳ (10—7—30) வியாழக்கிழமை]முதல் விச்வரூபயாத்திராமஹோத்ஸவ தினமாகிய பாத்ரபத சுத்தபூர்ணிமை [ஆவணி-௴ 23௳ ஞாயிற்றுக்கிழமை] பரியந்தம் இரண்டுமாதகாலம் இவ்வருஷத்திய சாதுர்மாஸ்யவிரதத்தை ஸ்ரீகாஞ்சிமண்டலத்தைச்சேர்ந்த ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதாளால் சக்ரப்ரதிஷ்டை செய்விக்கப்பட்ட படைவீடு ஸ்ரீ ரேணுகாம்பிகை ஸ்தலத்திற்கும் அடையபலம் முள்ளண்ட்ரம் முதலிய ப்ராசீன சுரோத்ரீய அக்ரஹாரங்களுக்கும் மத்யத்தில் பூஜாபர்வதவனமத்தியில்(பூசைமலை—குப்பம்)நடத்துகிறபடியால் ஸ்ரீமடம் சிஷ்யகோடி மஹாஜனங்கள் முதலான யாவரும் வந்திருந்து சாதுர்மாஸ்யப்ரயுக்தமாய் நடக்கும் ஸ்ரீஸ்வாமி பூஜாப்பிராம்மணஸந்தர்ப்பணாதிகளையும் வித்வத்ஸபைகளையும் கிரமப்பிரகாரம் நடத்திவைத்து வியாஸாக்ஷதப்ரஸாதம் பெற்று ஐஹிகாமுஷ்மிகபலன்களை அடையவேண்டுமாய்க் கோரப்படுகிறது.

முகாம்: வாகூர், பிரமோத௵ ஆனி௴ 15௳ } ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி, ஸ்ரீகார்யம், K. குப்புஸாமிஅய்யர்.

பூசைமலை—குப்பம் என்னும் இடம் வுழுப்புரம்—காட்பாடி மார்க்கத்தில் கண்ணமங்கலம் ஸ்டேஷனிலிருந்து 8மைல், ஆரணியிலிருந்து 13மைல். ஒண்ணுபுரம் ஸ்டேஷனிலிருந்து பாதசாரியாக 5மைல்.